<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி</u>

அ.வ.எண்.127/2022 தேதி.21.09.2023
வா.சா. 1

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>

நான் ஏற்கனவே வா சா ஆ 1 முதல் 10 ஆவணங்களை குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளேன். எனது தரப்பில் மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்ய சாட்சியம் அளித்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக 08.12.2021 ல் சென்னை, ஊனமுற்றோர் மற்றும் ஊனமுற்றோர் நல இயக்கத்திற்கான மாநில ஆணையர் அவா்களால் வழங்கப்பட்ட அங்கீகார சான்று அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா சா ஆ 11. 05.07.2022 ல் மயிலாடுதுறை மாவட்ட சமூக நல அலுவலரால் வழங்கப்பட்ட பதிவு சான்று அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா சா ஆ 12. 08.12.2021 ல் சென்னை, ஊனமுற்றோர் மற்றும் ஊனமுற்றோர் நல இயக்கத்திற்கான மாநில ஆணையர் அவா்களால் வழங்கப்பட்ட பதிவு சான்று அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா சா ஆ 13. 27.06.2017 ல் சமூக நல துறையின் ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட பதிவு சான்று அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா சா ஆ 14. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>